உ

சிவமயம்.

தவத்திரு சாந்தலிங்கர்
தமிழ்க் கல்லூரி

வெளியீடு 1.

# சிவராத்திரி நோன்பு

ஒரு அங்க நாடகம்

ஆக்கியோன்:

கோவை கிழார்

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
தமிழ்க் கல்லூரி
திருப்பேரூர்
1954

விலை அணா 5

உ

சிவமயம்.

# சிவராத்திரி நோன்பு.

## முன்னுரை.

**சி**ல நாட்களுக்கு முன் ஒரு ஆஸ்திரேலியா ஆசிரியர் கோவைக்கு வந்தபோது யூனியன் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் ஒரு அருமையான ஒற்றை உறுப்பின நாடகத்தை நடத்தினர். அவரே பல உறுப்பினர்களாகவும் பேசி நடித்தார். மிகவும் வியக்கத்தக்க முறையில் அது இருந்தது. அதனைக் கண்டு களித்த திரு R. K. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ஆசிரியரை மிகவும் பாராட்டிப் பேசினர். இந்த முறையில் எந்த நாட்டிலும் அதைப்போல நடத்தின நாடகத்தைத் தான் கண்டதே இல்லை என்றார். நானும் அதனைக் கண்டு மிகவும் களித்தேன்.

அப்போது எனக்கு ஒரு எண்ணம் தோன்றிற்று. அதனை ஒரு ஓரங்க நாடகமாக எழுதி வெளியிடலாம் என்று எண்ணினேன். கதையும் நன்றாக இருந்தது. ஆங்கிலத்தில் சார்லஸ் டிக்கன்சு என்ற நவீனக ஆசிரியர் எழுதிய கிறிஸ்துமஸ் கரோல் என்ற நூலில் கண்ட கதை அது ஆகும். அதனை நமது தமிழ்நாட்டுக் கதையாக மாற்றி ஒரு நாடகமாக எழுதினல், நமது நாட்டிற்கும், சமயத்திற்கும் ஏற்றதாக இருக்கும் என்று நினைத்தேன். உடனே எழுதத் தொடங்கினேன்.

எழுதினதும் அதை நண்பர்களுக்குக் காட்டினபோது அவர்கள் அதனை வெளியிடும்படி தூண்டினார்கள். அந்த முறையில் இந்நூல் கல்லூரி வெளியீடாக வெளிவருகிறது.

இதனை நமது பள்ளிகள், கல்லூரிகள் முதலிய படிப்பகங்களில் நடத்திவைத்தால், தமிழ் மக்கள் மிகவும் நன்மையடையலாம்.

கோவை நிலையம்
1954

**கோவை கிழார்.**

# சிவராத்திரி நோன்பு.

## (ஒரு நாடகம்.)

### உறுப்பினர்கள்:

**ஆண் :**

| | | |
|---|---|---|
| பொன்னப்பன் | — | முதலாளி கஞ்சன் |
| முருகன் | — | கணக்குப்பிள்ளை |
| கந்தன் | — | பொன்னப்பன் மருமான் |
| மெய்யப்பன் | — | பொன்னப்பனின் இறந்த கூட்டாளி |
| சைவ பரிபாலனசபை அங்கத்தினர் இருவர் | | ஏனையோர் |
| முருகன் மக்கள் | | ஏனையோர் |
| கந்தன் மக்கள் | | ஏனையோர் |
| தெருப்பிள்ளைகள் | | ஏனையோர் |

**பெண் :**

| | | |
|---|---|---|
| வள்ளி | — | முருகன் மனைவி |
| தெய்வயானை | — | கந்தன் மனைவி |

**இடம் :**

| | | |
|---|---|---|
| பொன்னப்பன் | — | கடை |
| ,, | — | குடி அறை |

முருகன் வீடு

கந்தன் வீடு

மற்ற இடங்கள்

# சிவராத்திரி நோன்பு.

## ( ஓரங்க நாடகம்.)

### காட்சி 1.

இடம் :- பொன்னப்பன் காரியாலயம் (இருளடைந்தது)
உறுபபினர் :- பொன்னப்பன் சிறு மேஜையணடையும்
முருகன அடுத்த சிற்றறையில் சிறு மேஜையிலும்

பொன் : *முருகா; என்ன தூங்குகிறாயா, பேரேடு இன்றைவரை பதித்து விட்டாயா. இரசீதுகள் சரிசையாக ஒட்டியாகி விட்டதா. கடிதங்கள் எல்லாம் தபாலுக்கு தயாராக இருக்கின்றனவா? - என்ன பேசவில்லை?*

முரு : *சுவாமி, எல்லாம் தயாராகிவிட்டன.*

பொன் : *உடனே பதில் சொல்வதற்கென்ன? - உனக்கு என்னத்திற்காக மாலை ஓய்வு வேண்டும்? ஒருவேளைச் சம்பளம் வீணாகப் போகிறதில்லையா? சம்பளம் பிடித்தம் செய்துகொள்ளின் அது உனக்குச் சம்மதமா?*

முரு : *மன்னிக்க வேண்டும். நாம் சைவர்கள் அல்லவா? சிவராத்திரியன்று எல்லா அலுவலகங்களிலும் ஓய்வு தானே. பூஜை நடத்தவேண்டாமா. தங்களுக்குப் பிரியம் இல்லாவிடில், வேண்டாம். கடவுள் காரியம்.*

பொன் : *கடவுள் காரியம்? நீ என்ன கடவுள் காரியம் சாதித்துவிட்டாய். உன் வீடோ பெரிய குடும்பம். அதற்குரிய பொருள் சம்பாத்தியம் நீ கவனிக்கவில்லை. கடவுளை நினைப்பதற்கு உனக்கு எங்கே நேரம் இருக்கும். ஏதோ போனாற் போகிறது. அரைநாள் நஷ்டம் வந்தாற் போகட்டும். வேலைபாக்கி வைக்காமல் முழுதும் பூர்த்தி செய்துவிடு.*

முரு : *அப்படியே செய்கிறேன். சுவாமி.*

**போர்ன்:** ஞாபகம் இருக்கட்டும். நாளைக் காலை ஒரு மணி முன்னாலேயே வேலைக்கு வரவேண்டும். தவறினால் இன்றைய பாதி நாள் சம்பளம் பிடித்து விடுவேன்.

**முரு:** ஞாபகம் இருக்கிறது. தவறாமல் வந்து விடுகிறேன். (மீண்டும் வேலை செய்கிறான்.)

(கதவு தட்டிவிட்டு இரண்டு பேர் உள்ளே வருகிறார்கள்)

**முதல்வர்:** ஐயா வணக்கம். பெருமான் அருள்புரிவாராக!

**இரண்டாமவர்:** தாழ்ந்த வணக்கம். சிவம் பெருகுக. அடியார் வாழ்க!

**போன்:** தாங்கள் யாரோ? எனக்கு அறிமுகம் ஆனவர்களாகத் தெரியவில்லை. இது வாணிபச் செயலகம்.

**முதல்வர்:** அன்புமிக்க ஐயா, நாங்கள் தெரிந்துதான் வந்தோம். அதோ எதிரே இருக்கும் பெயர் அட்டையில் இரண்டு பேர்கள் தெரிகின்றனவே, அவைகளில் தாங்கள் எந்தத் திருப்பெயர் உற்றவர்களாக விளங்குகின்றீர்களோ, தெரிவித்தால் தங்களிடம் பேசுவதற்குத் தகுதியாக இருக்கும்.

**போன்:** தாங்கள் மிகப் பண்பாட்டோடு பேசுவதற்காக நன்றி செலுத்துகிறேன். எங்கள் இருவரில் யாதொரு வேற்றுமையும் இல்லை. என்னுடைய கூட்டாளி சிவபதம் அடைந்து எட்டு ஆண்டுகள் ஆகின்றன. முழு வாணிபத்திற்கும் நானே உரிமை உள்ளவனாக இருக்கிறேன். என்றாலும் ஆய்வந்த பெயரை விடுவதல் அர்த்தமில்லை. ஆகவே இன்றைக்கும் பழைய பெயரிலேயே வாணிபம் நடைபெறுகிறது. தாங்கள் பெயரைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். வந்த காரியம் சொல்லி விடுங்கள்:

**முதல்வர் :** தங்கள் வாணிபத்தின் வரலாற்றை விவரமாக சொன்னதற்காக மிகுந்த நன்றி. தாங்கள் சைவர். இன்று சிவராத்திரி. மிகப்புனித நாள். அந்தத் தொடர்பு பற்றித்தான் வந்துள்ளோம்.

**போன் :** வாணிபத்தைப்பற்றி அல்லபோல் இருக்கிறது. மற்ற விஷயங்களைப்பற்றி நான் தொடர்பு வைத்துக் கொள்வதே இல்லை. தங்களுக்குத் தெரியாமல் இருந் தால் இப்போது தெளிவாகச் சொல்லுகிறேன். தெரிந்துகொள்ளுங்கள். வணக்கம். எனக்கு வேறு வேலை யிருக்கிறது.

**முதல்வர் :** சுவாமி, நாங்கள் வந்த காரியத்தைப்பற்றி இன்னும் தெரிவிக்கவே இல்லையே. அதற்குள் விடை பெற்றுக் கொள்ளச் சொல்லுகிறீர்களே.

**போன் :** ஐயன்மீர், தாங்களோ வாணிபத்தின் பொருட்டு வரவில்லை. இந்த இடமோ வாணிபத்துறை. அதனை அறிவித்தேன். இனி என்ன பேச்சு இருக்கிறது?

**முதல்வன் :** அப்படியானால் தங்கள் குடியிருப்பு விடுதிக்கு வரலாமா. எப்போது வரலாம். தங்கள் பேட்டி மிகவும் அவசியம்.

**போன் :** நான் குடியிருக்கிறவிடுதியில் யாதொரு காரிய மும் வைத்துக் கொள்வதில்லை. உண்பது, உறங்கு வது இந்த இரண்டிற்குமே அது பயன்படுகிறது.

**முதல்வன் :** ஆகவே எங்கள் காரியத்தை இங்கேயே முடித் துக் கொள்வோம்.

**இரண் :** அதுதான் சரி. மற்றவர்களையும் பார்க்கவேண்டு மல்லவா?

**போன் :** மற்றவர்கள் ஜோலியில் நான் பிரவேசிப்பதே இல்லை. தாங்கள் விடைபெற்றுக் கொள்ளலாம்.

முதல்வர் : சுவாமி, அதற்குமுன் எங்களை அனுப்பி விடக் கூடாது. இன்று சிவராத்திரி ஒரு புனித தினம். தாங்கள் இன்று ஒரு புனித செயல் செய்யவேண் டாமா?

போன் : முன்னமே புனித நாள் என்று கூறிவிட்டீர்கள். எனக்கும் புனிதத்திற்கும் பொருத்தம் இல்லை. வீண் பொழுதுபோக்க வேண்டாம்.

முதல்வர் : சுவாமி, இந்தப் புனித நாளில் ஒரு புனிதச் செயல் செய்து புண்ணியம் சம்பாதிக்க வேண்டாமா?

> " இன்னே செயவும் வேண்டும், இனிதும்
> இன்றே செயவும் வேண்டும்,"

என்று பெரியவர்கள் சொல்லவில்லையா.

போன்: சொற்பொழிவுகள் நிகழ்த்துவதற்கு சங்கங்களும், மண்டபங்களும் இருக்கின்றன. இங்கே அவைகளை நிகழ்த்தினால் விழலுக்கிறைத்த நீராகிவிடும்.

முதல்வர் : சுவாமி, தாங்கள் ஒரு சைவத்தனவான். புனி தச் செயலை செய்வதில் தங்களுக்கு உதவிபுரியவே வந் வோம். வலிய வந்த சீதேவியை உதைத்துத் தள்ள லாமா? சிவராத்திரியின்போது ஒரு சிறு அறம் செய் யினும் அது கொண்டு பல ஏழை மக்களுக்கு அமுது அளித்து அதனால் தங்களுக்கு மாகேசுவர பூஜையின் பலன் அளிப்போம். இந்த கைங்கரியம் சிறப்பானது.

போன் : சரி. நான் எண்ணினபடியேயாயிற்று. நன்கொ டைக்காக வந்திருக்கிறீர்கள். சிவராத்திரியின்போது மாகேசுவர பூஜை செய்விக்க எத்தனையோ கோயில் களில் கட்டளைகள் இருக்கின்றன. அவைகள் நடப் பதில்லையா? ஒழுங்காக நடைபெறாவிட்டால் சமய பரிபாலனசபைக்கு மனுசெய்து கொள்ளுங்கள். அது வே தாங்கள் செய்யக்கூடிய கைங்கரியம்.

முதல்வர் : கோயில்களில் மாகேசுவர பூஜை நடைபெறு வதைப்பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. கோயில் கள் சம்பந்தமில்லாமல் எத்தனையோ புனிதச் செயல் களை செய்யக்கூடாதா. எங்கள் சங்கம் சைவசமய பிரசாரசபை. அன்னதானமும் அதனோடு செய்து வருகிறோம் புனித நாட்களில் ஏழை மக்கள் வீண் காலம் தள்ளாமல் சமயப் பயிற்சி தந்து அவர்களுக் குப். பாரணைவிருந்து அளிக்கிறோம். அதற்குத் தங்கள் உதவி வெகு சிறிதானாலும் அன்புடனும், நன் றியுடனும் ஏற்றுக்கொள்ளப்படும்.

போன் : ஏழைகளா? நீங்கள் கூறும் மக்கள் சோம்பலினால் ஏழைகள் ஆகிறார்கள். அவர்களுக்கு இலவசமாய்ச் சோறு ஊட்டினால் அந்தச் சோம்பலை மிகுதிப்படுத்து கிறீர்களே ஒழிய குறைப்பதில்லை. அந்தக் கூட்டத் தில் சேர எனக்கு விருப்பமில்லை.

வந்த : சோம்பல் இன்றியுள்ளவர்களும் பல காரணங்களி னால் உடுக்க உடையின்றிக் குடிக்கக் கூழ் இன்றி இருப் பதை நீங்கள் கண்டதில்லையா. கேட்டதில்லையா. அன்னாருக்கு உடையும், உணவும் அளிப்பது அறமல் லவா?

போன் : எனக்கென்னமோ அவ்வாறு தோன்றவில்லை. ஊரில் கோடிக்கணக்கான உயிர்கள் பிழைக்கத் தெரி யாமல் ஒரு உயிர் இரண்டு உயிர் இறந்துபோகக்கூடும். அதினால் என்ன வந்துவிட்டது? அது காரணமாக ஒரு கொள்கையை விட்டு விடக்கூடாது. சோம்பலை அதிகரிக்கக்கூடாது. அது இயற்கை வளர்ச்சிக்கு எதிரிடையானது.

வந்த : நண்பரே, ஒரு உயிரானாலும் என்ன, அதனுயிர் அதற்கு வெல்லமாகத் தான் தோன்றும். அது இறப்பதற்கு விடுவதைக் காட்டிலும் அது பிழைக்கச் செய்வதே உண்மையான அறம்.

**போன் :** என்னமோ தங்கள் வேதாந்தம் சரி என்று எனக்குத் தோன்றவில்லை.

**வந்த :** இதில் வேதாந்தம் ஒன்றுமில்லை. ஈரநெஞ்சுதான் வேண்டும்.

**போன் :** சுவாமி, அதில் எனக்கு விருப்பம் இல்லை. தாங்கள் விடைபெற்றுச் செல்லலாம்.

**வந்தோர் :** சரி, அப்படியானால் சென்று வருகிறோம். நாங்கள் சமயம் அறிந்து வரவில்லைபோல் இருக்கிறது. வணக்கம். பெருமான் அருள்புரிவாராக! (சென்றனர்)

**போன் :** (தனக்குள்) உருத்திராட்சப் பூனைகள், இந்தக் காலத்தில் எத்தனை பேர் சமயத்தின் பேரால் பெருந் தொகைகளைக் கொள்ளையடிக்கிறார்கள். இவர்களிடம் சிக்காமல் தப்பித்தேனே. என்னை நானே மெச்சிக் கொள்ள வேண்டும் அல்லவா. வேலை செய்யலாம். (பேரேடு எடுத்துப் பார்க்கிறார்.)

(கதவை தட்டிவிட்டு கந்தப்பன் உள்ளே பிரவேசிக்கிறான்.)

**போன் :** (தனக்குள்) இன்றைக்கென்ன கேடோ தெரியவில்லை. வாணிபத்திற்காக ஒரு புள்ளியும் காணோம். பொழுது போக்குவதற்காகவும் பணம் கொள்ளையடிப்பதற்காகவும் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டே இருக்கிறார்கள்.

(உரக்க) யாரது? என்ன சங்கதி?

**கந்தன் :** மாமா நான் தான் கந்தப்பன். இன்று சிவராத்திரியல்லவா? பார்க்க வந்தேன்.

**போன் :** சிவராத்திரி, சிவராத்திரி, ஏண்டா உனக்கு வேறு வேலை இல்லையோ? சிவராத்திரிப் பெயரைச்சொல்லி பார்க்க வந்தாயோ.

**கந்தன் :** மாமா அப்படி ஒன்றுமில்லை. சைவர்கள் அல்லவா. இந்தப் புனிதமான நாளிலாவது உறவினரைப் பார்க்கவேண்டாமா என்று வந்தேன்.

**போன்:** சரி. உனக்கு ஒரு **புனித** நாள் கிடைத்தது போல் இருக்கிறது. வேண்டாம் என்று சொல்லியும் ஒரு சிறுக்கியைக் கலியாணம் செய்து கொண்டாய். போதாக் குறைக்குப் பிள்ளைகளையும் பெற்றுவிட்டாய். பணம் வைத்துக்கொண்டு குடும்பத்தில் ஈடுபடவேண்டும்? இப்போது தெரிகிறதல்லவா குடும்பக் கஷ்டம்? சிவராத்திரி என்று சொல்லிக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டாய். சிவராத்திரி என்றால் உனக்கு என்ன? போய் வேலை செய் ஏன். என்னிடம் வரவேண்டுமா?

**கந்த :** மாமா, தப்பாய் நினைக்கவேண்டாம். சிவராத்திரிச் சாக்கு வைத்துக்கொண்டு காசு, கீசு கேட்கவரவில்லை. இந்தப் புனித நாள் வருகிறது. தங்களை அழைத்துப் போய் நாங்கள் செய்யும் பூசையைப் பார்த்துத் தாங்களும், அதில் கலந்துகொண்டு நாளைக் காலையில் பாரணை கழிக்கும் போது தாங்களும் விருந்துண்டு எங்களை ஆசீர்வதிக்கும்படி அழைக்க வந்தேன். வீணாக ஏதேதோ நினைக்கவேண்டாம்.

**போன் :** (பெருமூச்சுவிட்டுக் கவலைவிட்டு) கந்தப்பா இன்னும் சொல்லுகிறேன் கேள். சிவராத்திரி உனக்கு வேண்டாம் அது பணக்காரர்களுக்கு ஆனது. நிரம்ப செலவழிக்கவேண்டும். விருந்து வைக்கவேண்டும். உன் குடும்பமோ பெரியது. கண்ணைத் திறந்து கொண்டே குடும்பத் தொல்லையில் விழுந்தாய். நானோ இதில் எல்லாம் அகப்பட்டுக் கொள்ளமாட்டேன். பணம் சம்பாதிப்பது கஷ்டம். அதனைப் பிறர்க்கு அள்ளிக்கொட்டுவதில் என்ன பயன். பண்டிகை செய்வதைவிட்டு, விட்டு, வேலைசெய்து பணம் சம்பாதிப்பாய்.

கந்த: மாமா நீ ஒருவன் தான் எனக்கு நெருங்கிய சொந்தக் காரன். நானே கட்டப்பட்டுத்தான் ஜீவனம் செய்கி றேன். ஒருவரைப் பிச்சையோ, தர்மமோ கேட்ட தில்லை—கேட்கப்போவதுமில்லை.

போன்: அப்படிச் சொல்—உன்னை மெச்சினேன்.

கந்த: ஆனால் எப்போதும் வேலைசெய்து கொண்டிருந்தால் என்ன சுகம். நமது பெரியோர்கள் புனித நாட்களை உண்டாக்கி யிருக்கிறார்கள். அப்போதாவது ஓய்வு எடுத்துக்கொண்டு கடவுளை நினைத்துக்கொண்டு ஆன் மாவுக்கு உறுதி தேட வேண்டாமா? இன்று சிவராத் திரியன்று அலுவலகத்திலே விடுமுறை தந்திருக்கி றார்கள். என் மனைவி சிவராத்திரி கொண்டாடவேண் டும் என்கிறாள். குழந்தைகளும் விரும்புகிறார்கள். அப்போது உங்களை நினைத்தேன். உங்கள் ஆசீர்வா தம் பெற்றுக்கொண்டு இந்தத் திருநாளைக் கொண் டாடப் போகிறேன். இன்று இரவு கோயிலுக்குச் சென்று பெருமானை ஆராதித்துவிட்டு இரவில் புனித நூல்களையும் திருப் பாடல்களையும் வாசித்துவிட்டு, நாளைக் காலை பாரணை விடுகிறோம். தாங்கள் இன்று வரமுடியாவிட்டாலும் நாளைக் காலை பாரணை விருந் துக்கு வரவேண்டும். தங்கள் குழந்தை, என் மனைவி, மிகவும் விரும்புகிறார்கள்.

போன்: போடா போ. உனக்கு என்ன வேலை? கிழவன் பேச்சைக் கின்னரக்காரன் கேட்பானா என்பது போல ஆயிற்று. நீ பெரிய குடும்பி, பண்டிகைப் பப்பங்களில் அதிகமாகச் செலவழிக்காதே, என்று புத்திமதி சொன்னால் அதனை ஏற்றுக்கொள்ளாமல் எனக்கே புத்தி சொல்ல வந்தாயோ? நான் நாளை வந்து உன்னிட வீட்டில் விருந்து உண்டால் நீ செய் யும் குற்றத்திற்கு நானும் உடந்தை ஆவேன். நான் வர மாட்டேன்.

**கந்த:** மாமா, எனக்காக வேண்டாம். என் மனைவிக் காகவும், என் குழந்தைகளுக்காகவும் வரமாட்டீரா. உங்களைக்கண்டால் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்களே. கஷ்ட ஜீவனத்தில் ஒரு நாளாவது பெருமான் அருளினால் ஓய்வும், மகிழ்ச்சியும் ஆனந்தமும் உற வேண்டாமா.

"விருந்திற்கழகு கிளையோடுண்ணல்" அல்லவா.

**போன்:** நீதான் நிரம்பப்படித்து விட்டாயோ? அது எல்லாம் எனக்கு ஏறுது. எனக்கு வேலையிருக்கிறது. சீக்கிரம் முடிக்கவேண்டும். நீதான் கெட்டுப்போனால் நானும் கெடவேண்டுமா?

**கந்த:** மாமா. கடைசிமுறை. கெஞ்சிக் கேட்கிறேன். சிவபெருமான் பூசை. உலகைக் காக்க ஆலகால விடத்தை உண்ட தியாகப் பெருமான் திருநாள். தாங்கள் பாரணைக்கு வந்தால் வெகு அழகாக என் இல்லம் புனிதம்பெறும்.

**போன்:** போதும் போதும், நான் வரமாட்டேன். உன் வேலைக்குப் போ. கடைசி வார்த்தை - வீண் செலவு செய்யாதே.

(கந்தன் போதல்)

**போன்:** முருகா, வேலை செய்தாய் விட்டதா. இன்றைக் கென்ன வீண் விவகாரங்கள், ஒன்றன்பின் ஒன்று வருகின்றன. நேரம் ஆய்விட்டது. சட்டென்று முடிவுசெய்.

ஜாக்கிரதை, நாளை காலை 10-மணிக்கு தயாராக வந்து விடு. இல்லாவிடில் சம்பளம் பிடித்தம்.

(முருகன் போகிறான். பிறகு பொன்னப்பன் எல்லா கதவுகளையும் நன்றாக சாத்திவிட்டு, பூட்டிவிட்டுப் போகிறான்.)

## காட்சி 2.

இடம் :— பொன்னப்பன் குடியிருந்த அறை இருட்டு.

உறுப்பினர் :- பொன்னப்பன், சிறு விளக்கு, பழைய படுக்கை.

**போன் :** (*தனக்குள்*)

*இன்றைக்கென்ன கிரகசாரமோ தெரியவில்லை. எனது மனது தடுமாறுகின்றது. இந்த 65 ஆண்டுகளாக எத்தனையோ சம்பவங்களைக் கண்டிருக்கிறேன் - இன்று என் நெஞ்சு சஞ்சலம் அடைந்ததைப் போல் அடைந்ததில்லை. அது எனக்கே விளங்கவில்லை. எப்போதும் போலதான் இன்றும் சூரியன் உதித்தான். நானும் கஞ்சி குடித்துவிட்டு கடைக்குச் சென்றேன். அங்கே சகல காரியங்களையும் கவனித்தேன். இன்று சிவராத்திரியாம். 65 சிவராத்திரிகளைக் கண்டிருக்கிறேன். அப்போது அவைகள் எனக்கு ஒன்றும் செய்யவில்லை. இந்த சிவராத்திரி மட்டும் ஏன் எனது நெஞ்சை அலைக்கழிக்க வேண்டும். போதாக் குறைக்கு ஒருவர் பின் ஒருவராக என் உறுதியைக் கலைக்கத் தொடங்கினார்கள். நான் கீழ்ப்படிவேனா? அத்தனைக் கோழையல்ல. முதலில் அந்த அற்ப தரித்திரன் என் கணக்குப்பிள்ளை விடுமுறை கேட்டான். இதுவரை அவ்வாறு கேட்க அவன் நா துணியுமா. பிறகு இரண்டு பேர் பக்காப் பூனைகள் என்னிடமிருந்து பணம் பறிக்க வந்தனர். அவர்களை விரட்டி விட்டேன். பிறகு அந்த சோப்பளாங்கி கந்தன் வந்தான். என்னை பாரணை விருந்தளிக்க அழைத்தான். துரத்திவிட்டேன். என்ன சிவராத்திரிக்கு இத்தனை பெருமையா? எத்தனை பெருமையோ இருக்கட்டும். அவைகள் எல்லாம் என் உறுதியைக் கலைக்க முடியாது. அதுவரை வெற்றியே.*

*வீட்டிற்கு வந்தேன் கஞ்சி குடித்தேன். பழைய கணக்கு பார்த்தேன். இன்னும் எத்தனை பாக்கி வசூல் இருக்கிறது? ஏன் கடன்காரர்கள் சரியாகக்*

கொடுப்பதில்லை. கணக்கை மீண்டும் மீண்டும் சடுதி பார்த்தேன். ஒத்துவரவில்லை. அந்த தரித்திரன் தப்பு எழுதினானோ? நான் சரியாகக் கூட்டினேனோ? 25 வருடங்களாக நம்பிக்கையோடு வேலை செய்தவன் தப்பு செய்யமாட்டான். என் மனம்தான் தடுமாறி யிருக்கவேண்டும். மறுபடி பார்க்கிறேன். ஏன் என் கண் அயர்கிறது. தூக்கமும் வருகிறது. கணக்கு ஒழுங்கு ஆக மாட்டேன் என்கிறது. நாளை கணக்கனுக்கு ஒரு அடி கொடுக்கவேண்டும். என்ன, தலைபாரமாக இருக்கிறது!

ஒன்றும் விளங்கவில்லை. மயக்கமாக- இருக்கிறது. சிறிது படுத்துக் கொள்வோம். ஓய்வு எடுத்துக் கொள்வோம். பின்னர் வேலை செய்வோம்.

(தூங்குகிறான்.)

(நடு ஜாமம். திடுக்கிட்டெழுந்து உட்காருகிறான். ஒரு ஒளி தெரிகிறது.)

**போன்:** இதென்ன வெள்ளிச்சம். ஜன்னல் திறந்ததோ. மூடினேனே. அதோ அந்த மூலையில் தொங்குகிற மணி ஆடுகிறதோ? காற்று இல்லை. அதை யார் எப்போது கட்டினார்களோ. தெரியாது. எனக்கு நினைவு செல்லுகிற வரையில் அந்தக் கயிற்றில் மணி தொங்கிக் கொண்டிருக்கிறது. ஏன் அசைகிறது. அடடா மணியும் அடிக்கிறதே. ஒன்று, இரண்டு, மூன்று.........பன்னிரண்டு ஆ, ஆ, நடுஜாமம்......... அதோ வெளிச்சம் படர்கிறது. ஒரு உருவம்! திருடனோ! அல்ல, பேய் பிசாசு! இதுவரை வராத பேய் இன்று ஏன் வரவேண்டும். ஆனால் இதற்கெல்லாம் அஞ்சுவேனோ.

அதிக உணவு உண்டு விட்டால் பேய் கனவு வரும் என்பர். நேற்று அதிகம் உண்டுவிட்டேனோ. இந்தப் பேய் என்னிடம் ஏன் வரவேண்டும். அதோ, அது என்னைப் பார்க்கிறது. என்னிடம் வருகிறது.

ஓ, பேயே, பிசாசே, நீ ஏன் என்னிடம் வரவேண்டும். நான் என்ன உனக்குச் செய்தேன்.

பேய்: என்ன செய்தாயா. என்னைப் பார். நான் யார் அறிகிருயா?

போன்: ஐயோ, மெய்யப்பனு! நீ இறந்துபோய் எட்டு வருஷம் ஆகிறது. உன்னை நான்தான் புதைத்துச் சமாதி கட்டினேன். நீ ஏன் இன்றைக்கு என்னிடம் வரவேண்டும். உன்னை மோசம் செய்ததில்லையே.

பேய்: பொன்னப்பா. உண்மை. நீ மோசம் செய்ததில்லை. உன் வாழ்க்கை எப்படிப்படடது நீயே பார்.

போன்: என் வாழ்க்கையில் என்ன குறை குற்றம் உண்டு. நான் யாரை வஞ்சித்தேன். பாடுபடுகிறேன். சம்பாதிக்கிறேன். அதுவும் தப்பா.

பேய்: பாடுபட்டுச் சம்பாதிப்பது தப்பல்ல. ஆனுல் யாருக்காக சம்பாதிக்கிருய்? உனக்கு வயதென்ன ஆயிற்று. கவனித்தாயா. யாருக்கு என்ன உதவி செய்தாய்.

போன்: எனக்கு வயது 75 ஆயிற்று இதுவரை எவரையும் மோசம் செய்ததில்லை. ஏன் நான் பிறருக்கு உதவி செய்யவேண்டும்? நீ என்ன உதவி செய்தாய். உன்னைப் போலவே வாழ்கிறேன்.

பேய்: ஆம். நான் உதவி செய்யவில்லை. அதற்காக நான் படும் துன்பத்தை அறிவாயா? நான் உதவி செய்திருந்தால் இந்தப் பேய் கோலத்தில் அலையமாட்டேன்.

போன்: அவனவன் தன் தொழிலைச் சரியாய்ச் செய்தால் கூடத்தப்பா? நான் பாடுபட்டுச் சம்பாதிக்கிறேன். அதுபோலவே உலகில் ஒவ்வொருவனும் பாடுபட்டுச்

சம்பாதித்தால் அதுவே போதாதா. ஒருவன் மற்ெருருவனுக்கு ஏனே உதவி புரியவேண்டும். உலகின் இயல்பே ஒவ்வொருவனும் சம்பாதித்துப் பிழைக்க வேண்டியதல்லவா.

பேய்: நீ சொல்லுவது பொதுநல உடமை. அது சரியானதுதான். ஆனல் உலகில் எத்தனை பேர் சம்பாதிக்க வகையில்லாமல் இருக்கிருர்கள். அன்னூர்களுக்கு உன்னைப்போல் சம்பாதிப்பார் உதவி புரியவேண்டாமா.

போன்: ஏன் அப்படிப்பட்ட சோம்பேறிகள் உலகில் இருக்கவேண்டுமோ? சம்பாதிக்க வகையில்லாதவன் உலகை விட்டு வெளியேற வேண்டியதுதான்.

பேய்: வெகு சுலபத்தில் அவர்களை வெளியேறும்படி சொல்லிவிட்டாய். கூன், குருடு, செவிடு, பேடு, இவர்கள் இருக்கிருர்களே, அவர்கள் என்ன செய்வார்கள். அவர்களைப் பாதுகாப்பது முழு அவயவங்கள் உடையவர்களின் கடமை அல்லவா?

போன்: ஏன் அவர்கள் பிறக்கவேண்டுமோ? உலக வாழ்க்கைக்குத் தகுதியற்றவர்கள் இல்லாமல் போவதேமேல்.

பேய்: ஓ, ஓ, உலகம் உன்னைப்போலப் பூர்ணப் படைப்புகளுக்கே வேண்டியதுதானே. அது தன்னலம் அல்லவா. சுயநலப் புலிகள் உலகெங்கும் பெருகினல் வாயற்ற ஆடுகள் உலகில் எவ்வாறு பிழைக்கும். சிருட்டியில் எல்லாவிதப் பிறப்புக்கள் இருக்கவேண்டாமா.

போன்: இந்த வேதாந்தம் எனக்கென்னத்திற்கு. நீ உலகில் இருந்தபோது இவ்வாறு சொன்னதில்லையே.

பேய்: அந்தத் தப்பிற்காகத்தான் இப்போது வருந்துகிறேன். நான் இறந்து எட்டு வருஷங்கள் ஆயின. ஒரு

வித அமைதி, ஓய்வு இன்றி அலைந்துகொண்டிருக்கிறேன். நான் உலகில் ஒரு நன்மை செய்திருந்தால் அந்த புண்ணியம் என்னைக் காத்து என்னைக்கரை ஏற்றிவிடும். நான் எத்தனை சம்பாதித்தேன்? ஒரு காசும் என்னோடு வந்ததா? அவற்றை நீ அனுபவிக்கிறாய். நீ இறந்தால் அப்பணம் உன்னோடு வருகிறதா? உனக்கு மனைவி மக்கள் கூட இல்லையே, அந்த விதத்திலும் என்ன சுய நலம்—உன் பணத்தை யார் பின்னால் பங்கு போட விவாதம் செய்வார்களோ? நீ அறிவாயோ. ஏன் இப்படி பணத்திற்காக உயிர் விடுகிறாய்.

**போன்:** பணத்தை எல்லாம் கொடுத்துவிட்டு நான் என்ன பண்ணுவது.

**பேய்:** வேண்டிய மட்டும் வைத்துக்கொண்டு பாக்கி தான தருமம் செய்யேன்?

**போன்:** அடே, பிசாசும் வேதாந்தம் பேசுகிறதே.

**பேய்:** ஆமாம். நான் எட்டு வருஷம் அலைந்த பிறகு உண்மை அறிகிறேன்—என்னைப் பிணைத்திருக்கும் இந்த சங்கிலிகளைப்பார். இவற்றின் கட்டுகளிலிருந்து நான் விடுதலைபெற முடியவில்லை. நீயாவது இந்தச் சங்கிலிகளால் சிறை பிடிக்காமல் இருக்கட்டும் என்று எண்ணி உன்னிடம் வந்தேன். இந்த உபகாரம் செய்தாவது என் அபாக்கிய நிலைமையை நல்லது ஆக்கிக் கொள்ள நினைக்கிறேன். தரும சக்கரத்திலே ஒரு உதவி செய்தாலும் அதில் பலனுண்டாம். அந்த முறையில் உனக்கு உபதேசம் செய்து என் நிலைமைக் காட்டி என் ஆன்மாவை ஈடேற்றிக் கொள்வேன்.

**பேய்:** பேயே, உன் உபதேசம் போதும். பேய் திருமறைகளைக் கூறியும் ஏமாற்றுமாம். என்னை ஏமாற்ற வேண்டாம்—தொலைந்து போ.

**பேய் :** நான் இங்கு இருக்கவில்லை. தொலைந்துதான் போகிறேன். நீ தொலையாமல் இருந்தால் போதும். நம்முடைய பழைய நட்பு என்னை இங்கே இழுத்தது. ஆனால் ஒரு சிறு சொல். இனி மூன்று ஆவிகள் உன்னிடம் வரும். ஒன்று பண்டைக்கால நிலை. மற்றொன்று நிகழ்கால நிலை. இன்னொன்று எதிர்கால நிலை. இவைகளின் சொரூபங்கள். முதல் இரண்டும் நல்ல ஆவிகள். மூன்றாவது கெட்டது. அவைகள் உன்னைச்சீர்திருத்தவே வரும். அவைகளாலும் நீ சீர்திருந்தாவிட்டால் உன் பிற்காலக் கெதியைப்பற்றி நான் கூற வேண்டியதில்லை. போகிறேன்.

(மெல்ல மறைதல்)

**பொன் :** பேயே, தொலைந்து போனாயோ. இனி என்னிடம் வர வேண்டாம். நான் என்ன சாப்பிட்டேன். அதிக பித்தச் சாமான் சாப்பிட்டேனா? இனிமேல், ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

(மீண்டும் தூங்குகிறான்.)

## காட்சி 3

இடம் :— பொன்னப்பன் படுக்கை அறை
உறுப்பினர் :— பொன் – திடுக்கிட்டெழுகிறான்.

**பொன் :** ஆ, ஆ, மறுபடியும் வெளிச்சம் தோன்றுகிறதே. ஒரு வேளை மெய்யப்பனின் பேய் சொன்னபடி நடக்கும்போல் இருக்கிறது. ஆனால் இந்த வெளிச்சம் எத்தனை அழகாக இருக்கிறது. வெண்மையும், நீலமும் கலந்து தோன்றுகிறது. அதோ, அந்த மூலை மணிக் கயிறு அசைகிறது. அடடா, ஒரு மணி அடிக்கிறது. நல்ல நேரம்.

அதோ என்னிடம் வருகிறாற்போல இருக்கிறதே. என்ன திவ்வியமான வெண்மை உருவம். தேவனோ, தேவியோ, தெரியவில்லை. திவ்வியமான சொரூபமே. நான் காணுகிறது மெய்யா. அல்லது பிரமையா.

திவ்விய சொரூபம் : நீ என்ன நினைத்துக்கொண்டாலும் நினைத்துக்கொள். என்னுடன் கூடவா, பல காட்சிகளைக் காண்பாய், அவைகளால் நீ நன்மை அடைந்தாலும் அடையலாம்.

பொன் : எப்படி வருகிறது. அருள் செய்ய வேண்டும்.

தி. சொ : இதோ என் கையைப் பிடித்துக்கொள். நீயே வருவாய்.

(பிடித்துக்கொள்ளுகிறான், இலகுவாக இருவரும் வான வீதியில் செல்லுகிறார்கள்.)

பொன் : சுவாமீ. நான் இத்தனை இலகுவாக இருக்கிறேனா எப்படி இத்தனை வேகமாகச் செல்லுகிறேன்.

தி. சொ : அவை எல்லாம் உனக்கு என்னத்திற்கு? இதோ பார் என்ன தெரிகிறது

பொன் : இது நாட்டுப்புறம் போலிருக்கிறது. ஆ, ஆ, எனக்குத் தெரிந்த ஊர்தான். நான் இளமையிலே வசித்த ஊர். பிறந்த ஊர். என் பெற்றோர் இங்கே வசிக்கிறார்கள். எனது அன்பிற்குரிய தாயார் அதோ வேலைசெய்து கொண்டிருக்கிறாள். என்ன ஆச்சரியம்! இதோ இந்தப் புல் தரையிலே நானே விளையாடிக் கொண்டிருக்கிறேன். எனது பாலிய அன்பர்கள் என்னோடு பந்து விளையாடுகிறார்கள். ஆம், இத்தனை அழகான சிறுவனாக இருந்தேனா. இப்போது பார். என்ன மூர்க்கமான உருவம். அழகு எப்படி விரூபம் ஆகிவிடுகிறது. வயது மட்டுமோ இதற்குக் காரணம்?

வேறு காரணமுமுண்டோ. அதோ எங்கள் ஊர்க் கோயில், சிவராத்திரி நாள். என் பெற்ருேர்கள் என்னை அழைத்துக்கொண்டு கோயிலுக்குச் செல்லு கிருர்கள். தீபாராதனை, தேவார பஜனை, வில்வார்ச் சனை எல்லாம் நடைபெறுகின்றன. மறுநாள் பாரணை விடுகிருர்கள். எத்தனை இனிய தின்பண்டங்கள் உண்கிருேம். பிள்ளைகள் எல்லாரும் சந்தோஷமாக இருக்கிருர்கள். அடுத்த நாள் பள்ளிக்கூடம் செல்லு கிறேன்—பாடம் வாசிக்கிறேன். விளையாட்டிடத்தில் விளையாடுகிறேன்—எத்தனை மனோரம்யமான வாழ்க் கை? இது எல்லாம் ஏன் இப்போது இல்லையோ.

**தி. சோ :** அதற்கு யார் காரணம்? நீயே நினைத்துப்பார். மேலும் செல்வோம்.

**போன் :** என்ன அருமையான இயற்கைக் காட்சி. இதன் நடுவில் ஒரு அழகிய சிறு ஊர். இதுவும் எனக்குத் தெரிந்ததே. நான் உயர்தரப் பாடசாலையில் வாசித் தது இந்த ஊர். இந்த ஊரிலும் ஒரு அருமையான கோயில். சிவராத்திரி விடுமுறையின்போது கோயி லுக்கு வழிபாடு இயற்றச் செல்கிறேன். என்ன இனிமையான தேவாரபாராயணம்? இப்போது ஏனே நான் இரசிக்கவில்லை.

**தி. சோ :** அதனை நானே கூறுவது? நீயே அறிந்துகொள். மேலே செல்வோம்.

**போன் :** மற்ருெரு நகரம். இதுவும் தெரிந்ததே. நான் வாலிபம் நிறைந்த மகனாக இருக்கிறேன். ஒரு வாணி பத் துறையில் ஈடுபட்டுள்ளேன். அதோ ஒரு இளை மை நிறைந்த சுந்தரியோடு உலாவச் செல்கிறேன். அவள் என் காதலியா. இங்கேயும் சிவராத்திரியா. இன்னிசை முழங்குகிறது. கோயிலுக்கு என் காத லியை அழைத்துச் செல்கிறேன். தேவா, மற்றப்

பகுதியைக் காட்டவேண்டாம். என் காதல் முறிந்ததும் கதை முடிந்தது — வேண்டவே வேண்டாம்.

**தி. சோ :** மேலும் செல்லலாம்

**போன் :** பெரிய நகரம். மாட மாளிகை கூட கோபுரங்கள். கடைத் தெரு—வாணிபத்துறை. வர்த்தகச் சங்கம்—பண்டம் மாற்று. நாணய மாற்று.

இந்த சந்தடியில் நடுவே என்னுடைய காரியாலயம். ஐயோ. முந்திய காட்சிகள் எத்தனை தூய்மை! இவைகள் எத்தனை பொய்ம்மை. ஏன் இதில் புகுந்தேனோ? இதோ மெய்யப்பன் நிற்கிருன். இவனோடு பங்கு கொண்டேன். கூட்டாளியும் நானும் வியாபாரம் நடத்துகிரும். நாளுக்கு நாள் பணத்தின்மேல் ஆசை. பணமே உயிர்நாடி. காதல் விளையாட்டு இல்லை. குடும்ப கோஷம் இல்லை. உலக வாழ்க்கையே பண மயம். மெய்யப்பனும் அப்படியே. நானும் அப்படியே. பணம் பெருகிற்று. யாதொரு உடல் நலத்திற்கும் கவனிப்பு இல்லை. திடீரென்று மெய்யப்பன் இறந்தான். ஐயோ, ஒரு தம்பிடியும், அவன் எடுத்துப்போகவில்லை. அவனுக்கு வார்சு இல்லை. நானே வார்சு. அவனை புதைத்துவிட்டு வருகிறேன். அதே நாள் வாணிபம் செய்கிறேன். என்ன கடின சித்தம் என்று இப்போது தோன்றுகிறது. அப்போது தோன்றவில்லை. பின் கெதியை யார் நினைத்தார்கள். சிவராத்திரி நினைவே வருவதில்லை. ஓய்வும் இல்லை. விடுமுறையும் இல்லை.........

(என்று சொல்லிக்கொண்டே சாய்ந்தான் தூங்கினுன்)

**திவ்விய சொரூபம் :** மறைவு.

## காட்சி 4.

*அதே அறை. தூக்கத்திலிருந்து எழுந்து திடுக்கிடல்*

**போன்:** *ஆ; ஆ; மறுபடியுமா ஒளி. இவ்வொளி வெகு பிரகாசமாக இருக்கிறதே. இப்போது நிகழ்கால ஆவி வரும்போல் இருக்கிறது. என்ன தேசோமயம். ஆனால் இந்த உருவம் ஆனந்தத்தை உண்டு பண்ணு கிறது. என்னைச் சீர்திருத்த வருகிறது போலும். தேவா, என் மீது கருணைகொண்டு இத்தனை தொலைவு வந்ததற்கு என்ன பாக்கியம் செய்தேனே. என்னை அழைத்துக்கொண்டு செல்லுங்கள். வருகிறேன் - மிக வும் சந்தோஷத்தோடு வருகிறேன்.*

**நி. தேவன்:** *என் பீதாம்பரத்துத் துணியைப் பற்றிக்கொள்.. நீ வெகு எளிதில் வரக்கூடும்.*

**போன்:** *அப்படியே செய்கிறேன் தேவா. (முதலில் முருகப்பன் வீட்டுக்குச் செல்கிறார்கள்.)*

**தே:** *இதோ. இங்கே என்ன நடக்கிறது பார்.*

**போன்:** *இது முருகப்பன் வீடு. மனைவி மக்கள் ஆனந்த மாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவன் மனைவி சமயலறையில் ஏதோ வேவித்துக் கொண்டிருக்கிறாள். சிறு குழந்தைகள் நன்றாக உடை உடுத்திக்கொண்டு, தலை வாரி அலங்கரித்துக்கொண்டு, திருநீறணிந்து கொண்டு, எங்கேயோ போக நிற்கிறார்கள். இத்தனை ஏழைக் குடும்பத்தில் என்ன சந்தோஷம். இதோ பார். முருகன், தேங்காய், பழம், ஊதுவத்தி முதலி யவைகளை வாங்கிக்கொண்டு வருகிறான். அவனைக் கண்டு குழந்தைகள் வெகு குதூகலத்தோடு ஓடி வர வேற்கிறார்கள்.*

**பேண்:** *அப்பா, எப்போது கோயிலுக்குப் போகலாம்.*

**முருகன் :** அம்மா கண்ணே, இப்போதே போகலாம். அம்மாள் சுண்டல் வேவிச்சாச்சுதா.

**பெண் :** ஆச்சுது அப்பா. நாங்கள் எல்லாரும் தயாராக இருக்கிறோம்.

**முருகன் :** தெய்வயானை, பிரசாதம் தயாராயிற்று?

**தெய் :** ஆம். ஆய்விட்டது. தாங்கள் பூசை சாமான் வாங்கினீர்களா? பிள்ளைகளா; ஞாபகமாகக் கடவுள் வணக்கச் செய்யுட்களை எடுத்துக்கொள்ளுங்கள். சந்நிதியில் நன்றாகப் பாடவேண்டும்.

**பிள்ளைகள் :** அம்மா அவசியம் பாடுகிறோம். அப்பா போவோம் (எல்லாரும் கோயிலுக்குப் புறப்படுகிறார்கள்.)

(ஆவியும், பொன்-னும் - போகிறார்கள்)

**பொன் :** சுவாமி, கோயில் இன்றைக்கு என்ன ஆனந்தமயமாக இருக்கிறது. எல்லாவிதமான மக்களும் வந்து கொண்டிருக்கிறார்களே. எல்லாரும் குடும்ப சகிதமாக வருகிறார்கள். எத்தனை பேர் ஆனந்தமாகத் தேவாரம் பாடுகிறார்கள். என் நெஞ்சு பொங்குகிறது. பணக்காரர்களும், ஏழைகளும் வித்தியாசமின்றிக் கோயிலில் இருக்கிறார்கள். இறைவன் முன்னிலையில் எல்லாரும் சமம்தானே.

**ஆவி :** கோயிலில் யார் இருக்கிறார்கள். சிறிது கவனித்துப் பார்.

**பொன் :** அடடா, முருகன். அவனுடைய குடும்பம் முற்றும் இருக்கிறது. அவர்கள் பூசை சாமான்களை பூசாரியிடம் கொடுக்கிறார்கள். இதோ பூசை நடக்கிறது.

**ஆவி :** மற்றும் பார்.

பேரன்: அடடா. இதோ கந்தப்பன். வருகிறான். அவனோடு அவன் மனைவி, குழந்தைகள் எல்லாரும் வருகிறார்கள். பரம தரித்திரர்கள். ஆயினும் எத்தனை தூய்மையாக இன்று இருக்கிறார்கள். இவர்களும் பூசை சாமானோடு வருகிறார்கள். பாவம், முருகன் ஒரு சிறு குழந்தையை எடுத்துக்கொண்டு செல்லுகிறான். குழந்தைக்குப் பிணியா, நொண்டிபோல் இருக்கிறதே. இதற்கு சிகிச்சை செய்யப் பணம் இல்லைபோல் இருக்கிறது. பாவம், நான் கொடுக்கும் சம்பளம் இத்தனை பெரிய குடும்பத்திற்கு எப்படிப் போதும். இந்த பாவம் என்னையும் பிடிக்குமோ. இவனை காரியாலயத்தில் எத்தனை கொடுமையாக நடத்தினேன். இவன் முகத்தில் ஒருவித சஞ்சலமும் காணோம்.

(பூஜை நடக்கிறது.)

கந்த: பிள்ளைகளா, பூஜை முடிந்தது. ஒரு தேவாரம் பாடுவோம்:—

பிள்ளைகள்: "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே"

(சம்பந்தர்)

"மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே
மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிறவாத
தன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினும் சொல்லும்
நாநமச்சிவாயவே." (சுந்தரர்)

**போன் :** இந்த ஏழைக் குழந்தைகள் என்ன உருக்கத்தோடு பாடுகிறார்கள். இவர்களுக்கு ஏன் இறைவன் கருணை காட்டமாட்டான்.

இதோ முருகப்பன் பூஜை செய்கிறான்.

**அவன் மனைவி:** சர்வேசுவரா, எனது சிறு குழந்தைக்கு நோய் அகற்றியருள்க. மருந்து கொடுக்க வகையில்லை. உன் கருணையே மருந்து. அருள்புரிக. (அர்ச்சகர் தீர்த்தம் கொடுக்க அதனை குழவிமீது தெளிக்கிறாள்.)

(எல்லாரும் போகிறார்கள்)

(கந்தப்பன் வீடு)

**கந்த :** எல்லாரும் அமருங்கள். நாம் பூஜை செய்த பிரசாதத்தை முதலில் அருந்துவோம்-பிறகு அம்மாள் சுண்டல் முதலிய தின்பண்டங்களைப் பரிமாறுவாள். பின்னர் பழங்களை சாப்பிடுவோம்.

**பிள்ளை:** அப்பா, எனக்கு சுண்டல் இஷ்டம்.

**1 பெண்:** எனக்கு திராட்சை வேண்டும்.

**2 பெண்:** எனக்கு பணியாரம் வேண்டும்.

**தேய்:** எல்லாருக்கும் எல்லாம் தருகிறோம்.

**போன் :** இவர்கள் எத்தனை சந்தோஷத்தோடு வாழுகிறார்கள். இதற்கு இறை பணியே காரணம் போலிருக்கிறது.

(முருகப்பன் வீடு)

**முருகன் :** பிள்ளைகளா எல்லாரும் வரிசையாக உட்காருங்கள். கோயில் பிரசாதத்தை முதலில் அருந்துங்கள். பிறகு தின்பண்டங்களைத் தின்னலாம்.

**வள்ளி:** *பிள்ளைகளே, அப்பா சொல்லுகிறபடி கேளுங்கள். சின்னக் குழந்தை மட்டும், அப்பா மடியில் உட்காரட்டும். மற்றவர்கள் எல்லாரும் வரிசையாக உட்காருங்கள். முதலில் தேவாரம் சொல்லுங்கள்.*

**பெரிய பிள்ளை:**
*"தலையே நீ வணங்காய்—தலைமாலை தலைக்கணிந்து*
*தலையாலே பலிதேருந் தலைவனைத் தலையே நீவணங்காய்"*

**மற்றவர்கள் :** *"தலையே நீ வணங்காய்"*

* * * *

**பெ. பி :-** *தேடிக்கண்டு கொண்டேன் — திருமாலொடு நான்முகனும்*
*தேடித் தேடொணாத்தேவனை என்னுளே*
*தேடிக்கண்டு கொண்டேன்"* (அப்பர்)

**எல்லாரும்:** *"தென்னாடுடைய சிவனேபோற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவாபோற்றி."*
(திருவாசகம்)

**வள்ளி:** *சரி சாப்பிடுங்கள்.* (எல்லாரும் சாப்பிடுகிறார்கள்.)

**பெரிய பிள்ளை :** *அப்பா, கோயிலிலே "காதலாகிக் கசிந்து" பாடினார்களே. அவர்களார் அப்பா.*

**முருகன் :** *அவர்கள் எங்கள் ஏஜமானனுக்கு உறவினர்கள்.*

**பெ. பிள்ளை :** *எத்தனை அழகாகப் பாடினார்கள். அதை எனக்குக் கற்றுக்கொடு அப்பா.*

**முருகன் :** *பிள்ளைகளா. ஒரு விடுமுறை வரட்டும். உங்கள் எல்லாருக்கும் சொல்லிக் கொடுக்கிறேன். எனக்கு அடுத்த மாதம் சம்பளம் வந்தால் எப்படியாவது மிச்சம் செய்து திருமுறை வணக்கச் செய்யுள் நூல் ஒன்று வாங்கித் தருகிறேன்.*

(எல்லாரும் பிரசாதம் உண்டபிறகு பழங்களை அருந்தி விட்டுப் பிறகு படுக்கத் தொடங்கினார்கள்.)

**போன்:** என்ன அமைதியான வீடு. எத்தனை ஒழுங்கு. பணக்காரர்களைவிட ஏழைகளே சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்கிறார்கள்.

**தே:** அப்படிச் சொல்—ஆனால் ஒன்று நினை. பணம் ஏழை என்பதல்ல. மனம் எந்தநிலை பின்பற்றுகிறதோ அதனைக் காரணம் என்று அறிக. இன்னும் கவனி.

**போன்:** ஐயோ, சிறு குழவி எங்கே காணோம்.

**தேவ:** நன்றாய்ப்பார். படுக்கையில் உற்றுப்பார்.

**போன்:** அது நோயால் வருந்துகிறதே. பெற்றோர்கள் சிறு தொட்டிலண்டை அமர்ந்து கண்ணீர் விடுகிறார்கள்.

**முருகன்:** கடவுளைத் தொழுதோம். நமது வினை. என்ன செய்யமுடியும். மருந்துக்கு வகையில்லை. வைத்தியனுக்குக் கொடுக்கக் காசு இல்லை. இறைவா. இந்த கஷ்டம் எப்போது தீரும்.

**வள்ளி:** இறைவனை நம்புவோம். நம்மைக் கைவிட மாட்டான்.

**போன்:** தேவா. இந்த சிசு இறந்துபோவானா?

**தேவன்:** அது உன்னை பொருத்து இருக்கிறது.

**போன்:** நாளை மட்டும் இறவாமல் இறைவன் காக்கட்டும்.

**தேவன்:** அக் குழவி இறந்தால் உனக்கென்ன. இன்று காலை தானே நீ என்ன சொன்னாய். உலகில் கணக்கற்ற

பேர் இ க்கிறார்கள். ஒரு உயிர் போனால் என்ன என்றாய். அல்லவா.

**பொன்:** (வெட்கப்பட்டு) ஆம் சொன்னேன். அந்த பொன்னப்பன் வேறு. இப்போது உள்ள பொன்னப்பன் வேறு.

**தேவன்:** அத்தனை விரைவில் ஆள் மாறாட்டம் ஏற்பட்டு விட்டதா.

**பொன்:** எல்லாம் தூய்மைத் தேவர்களின் செயல்கள்......

(தூங்கிவிடுகிறான்)

தேவன் மறைவு.

காட்சி 5.

அதே அறை. பொன். மீண்டும் விழித்து உட்காருகிறான்

**பொன்:** மீண்டும் சோதனையா. இந்த முறை எதிர் காலத் தேவன் தோன்றுவான். ஆ, என்ன ஒளி. ஆனால் வேறு விதம். மிக மந்தமான மப்பு ஒளி. (ஆவி தோற்றம்) இனி நான் அஞ்சுவதில்லை. எனது நன்மையின் பொருட்டேவருகிறீர்கள். இருந்தாலும் கரிய தேவதையாக அல்லவோ இருக்கிறாய், ஓ, பேசுவதில்லையா, சுட்டிக் காட்டுவதை அறிந்தேன். எதிர்காலத்தையும் பார்க்கவேண்டுமே. என்னை அழைத்துக் கொண்டுபோ.

இருவரும் வானில் செல்லுகிறார்கள்.

(முருகப்பன் வீடு.)

**பொன்:** இதோ பாருங்கள் அவன் வீடு தெரிகிறது. ஐயோ பவாம். சென்ற தடவை பார்த்தபோது எத்தனை சந்தோஷமாக இந்த வீடு தென்பட்டது. இப்போ

தோ ஒரே சாந்தம் நிலவி இருக்கிறது. எல்லாரும் துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறார்கள்.

தேவா, என்ன காரணம்.

(கருந்தேவன் ஒரு படுக்கையைச் சுட்டிக் காட்டுகிறான்.)

**போன்:** ஆம் அறிந்தேன். சிறு குழவி இருந்த இடத்தில் இல்லை. மாடிமேலே ஒரு சிறிய படுக்கையிலே நித்திய தூக்கம் தூங்குகிறான். அவன் சாந்த முகத்தில் களை தட்டுகிறது. மார்பின்மேல் மலர்கள் தூவப்பட்டிருக்கின்றன. ஐயோ பாவம், இந்தச் சிறு குழவிக்கு இக்கதியா வரவேண்டும்?

**முருக:** இறைவன் நல்லவர்களை விரைவில் அழைத்துக் கொள்ளுகிறான். நம்மைப்போல் இக் குழவியும் ஏன் வருந்தவேண்டும். இறைவன் கருணையின் பெருக்கத்தால் வரவழைத்துக் கொண்டான். நல்ல புல்லாந்தரையில் படுக்க வைப்போம். விருமுறைப் போதெல்லாம் நானே சென்று அங்கே கண்ணீர் உகுப்பேன்.

**வள்ளி:** குழந்தைகளே, நமது சிறிய தம்பி தூங்குகிறான். நமது அன்பைக் கடவுளிடம் தெரியப்படுத்தச் சென்றிருக்கிறான்.

**பிள்ளைகள்:** கண்ணீர் ததும்ப குழவியின் குளிர்ந்த கன்னங்களுக்கு முத்தம் இடுகிறார்கள்.

**போன்:** சுவாமி, நான் பார்த்தது போதும். என் நெஞ்சு தடுமாறுகிறது. நாம் போவோம். இனி நான் வேறொரு ஆள் ஆகிவிட்டேன்.

(மறைதல்)

## காட்சி 6.

காலை — விடியல்

(தெருவில் பஜனைக் கோஷ்டியார் பாடிக்கொண்டு செல்கிறார்கள்.)

**கோஷ்டி:** "பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

(திருவாசகம்)

**போன்:** அடே, பையா; இன்றைக்கு என்னடா விசேஷம்?

**தெருப் பையன்:** எஜமான் — இன்றைக்குப் பாரணை தேவார பஜனை போகின்றது.

**போன்:** பையா, இந்தத் தெரு மூலையிலே மிட்டாய்க் கடை இருக்கிறது. பார்த்தாயா. அங்கே போய் இதோ 10 ரூ. இதற்கு மிட்டாய் வாங்கிவா. உனக்கு பரிசு கொடுக்கிறேன்.

**பையன்:** அடே, கிழவன் புத்தி மாறி விட்டதோ! எஜமான்! இதோ போகிறேன் — (சிறிது நேரம் கழித்து 10 சேர் மிட்டாய் கொண்டு வந்தான்)

பொன்னப்பன்: அதனை நன்றாகக்கட்டி அதன்பேரில், முருகப்பன் என்று விலாசம் எழுதி, பாரணைக்காக அன்பன் அன்பளிப்பு என்று குறித்து பையனுக்கு 1. ரூ. கூலி தந்து முருகப்பனிடம் அனுப்பினான்.)

போன்: இன்றைக்கோ 10-மணி வரை வேலை இல்லை. கந்தப்பன் எப்படி இருக்கிறான் பார்ப்போம்?

(கந்தப்பன் வீட்டிற்குச் சென்றான் அவ்வழியில் சந்திப்போர்க்கெல்லாம் வணக்கம்சொன்னான். மக்கள் ஆச்சரியப்பட்டார்கள்.)

(கந்தப்பன் வீடு)

(வீடு தெரிந்ததே. வெகு மகிழ்ச்சியோடு உள் சென்றான்)

கந்த: மாமா வணக்கம். இன்று பாரணைக்கு வந்ததைப் பற்றி வெகு நன்றி.

தெய்வ: ஐயா, வணக்கம். தங்கள் வரவு நல்வரவு. விருந்து சாப்பிடவேண்டும்.

பிள்ளைகள்: தாத்தா வணக்கம். பண்டிகை அன்று வந்தது வெகு சந்தோஷம்.

அம்மா, பணியாரம், அப்பம், சுண்டல் எல்லாம் செய்திருக்கிறார்கள். வந்து சாப்பிடுங்கள்.

கந்த: மாமா, இன்றைக்கே நல்ல நாள். எங்களுக்கு இறைவன் எல்லா சம்பத்தையும் தந்துவிட்டான் என்று எண்ணிக் கொள்ளுகிறோம். நீங்கள் நீடூழி வாழ வேண்டும்.

போன்: நான் என்ன பேருதவி செய்து விட்டேன். விருந்துக்கு வந்தது ஒன்றுதானே.

கந்த: அது ஒன்றே போதும்—உலகிலேயே தாங்கள் ஒருவரே எனக்கு உறவு. பண்டிகையின் போது அந்த உறவு வந்தால் போதாதா.

போன்: நீங்கள் எல்லாரும் நல்ல குணம் உள்ளவர்கள். அதை இன்றுதான் அறிந்தேன். இனி எப்போதும்

உங்கள் வீட்டுக்கு வந்துபோவேன். பிள்ளைகள் எல்லாரும் நன்ருய் வாழட்டும். இறைவன் அருள் புரிவாராக. (போதல்)

(பொன் — காரியாலயம்)

மணி: 10-15 ஆய்விட்டது.

பொன்: இன்றைக்கு என்ன முருகன் இன்னும் வரவில்லையே. ஏனே காலதாமதம் (3-நிமிஷத்தில் வருகிருன்.)

முருகா: இன்று ஏன் நேரம் கழித்து வந்தாய். நேற்றே கூடாது என்று சொன்னது நினைவில்லையா.

முருக; சுவாமி; நினைவு இருக்கிறது. என்ன செய்வேன். குடும்பத்தொல்லை. சிறிது நேரம் அதிகமாகி விட்டது.

பொன்: சரி, அதற்கு என்ன சொல்லுகிருய்.

முருக: என்னை மன்னிக்கவேண்டும். வேண்டுமென்று நேரம் கழிக்கவில்லை. அதற்கு பிரதியாக மாலை 10-நி. அதிக வேலைசெய்து விடுகிறேன்.

பொன்: அதனை ஒத்துக்கொள்ள மாட்டேன். நீ செய்த குற்றத்திற்காக இந்தா இரட்டத்தனை சம்பளம். இனி சரியாக வேலைசெய்.

முருக: (தனக்குள்) இது என்ன உண்மையாகுமா. குற்றத்திற்கு இரட்டத்தனை சம்பளமா.

பொன்: என்ன யோசிக்கிருய். உன் குற்றத்திற்கு இரட்டத்தனை கூடுதலாகக் கொடுக்கிறேன். இனி நீ சரியாக நேரத்தில் வரமுடியும் அல்லவா.........

உன் சிறு குழவிற்கு எப்படி இருக்கிறது.

**முருக:** சுமாராக இருக்கிறது. வைத்தியர் கிடைத்தால் சௌக்கியமாகிவிடும்.

**போன்:** சரி, வைத்தியம் செய்ய இதோ 50 பொன் எடுத்துக்கொள்.

**முருக:** என் பாக்கியமே பாக்கியம். குசேலனுக்கு கண்ணன் செய்த உதவிபோல் அல்லவோ இருக்கிறது. இனி குழவி பிழைத்துக்கொள்ளும்.

**போன்:** முருகா, இனி அக் குழவியின் போஷணை என்னுடையதே. அவனைப் பள்ளியில் வைத்து, படிப்பு கொடுத்து என் வாணிபத்தில் வைத்துக்கொள்ளுகிறேன்.

**முருக:** வணக்கம். தங்களை என்றும் மறக்கமாட்டோம்.

**போன்:** எனக்கு வயதாகிவிட்டது இனி எனக்குச் சம்பாத்யம் வேண்டாம். ஏழை மக்களுக்கு உதவி புரிவதே நோக்கமாக இருப்பேன். என்னோடு சம்பந்தப்பட்ட இரு குடும்பங்களுக்கு உதவியும், கந்தனை என்வாரிசாகவும் எழுதி வைத்துவிடுவேன்.

(அது முதல் பொன்னப்பன் வேறு பொன்னப்பன் ஆகிவிட்டான்.)

மாடர்ன் பிரஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர்.